ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1599/13 - 2009 අප්‍රේල් 28 වැනි අඟහරුවාදා - 2009.04.28

1599/13 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்

217 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 217 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் ("ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது" என்ற வரைவிலக்கணத்தின் கீழ் ஓய்வூதியம், சேமலாப, பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியம் என்பவற்றுடன் தொடர்பில் பயன்படுத்தப்படும் பொழுது) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சஹம்பதி அங்கம்மன ஆகிய நான், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதியம், சேமலாபம் அல்லது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியத்துடன் தொடர்பான ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவான நிபந்தனைகள் 25 (1) (எ) பிரிவின் நோக்கங்களுக்காக இங்கு குறிப்பிடு செய்யப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளதாக இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

சஹம்பதி அங்கம்மன,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு,
2009, ஏப்பிறல் 24.

#### அட்டவணை

1. அனைத்து நிதியத்திற்கும் (அத்தகைய ஏதேனும் சேமலாப நிதியம், சேமிப்பு நிதியங்கள், ஓய்வூதிய நிதியம், நம்பிக்கை நிதியம் அல்லது பணிக்கொடை நிதியம்) எவரேனும் ஆளொருவரினால் ஏதேனும் கணக்கீட்டு வருடத்தில் அவ்வருடத்திற்காக அத்தகைய ஊழியரின் மொத்த சம்பளத்தில் 25 % இனை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

2. ஏதேனும் அத்தகைய நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள், அத்தகைய குறிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டுக்காக விஷேட அங்கீகாரமொன்று வழங்கப்படாத வரை பின்வரும் வரையறைகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

(i) அத்தகைய நிதியத்தின் பணத்தில் ஆகக்குறைந்தது 50% ஆனது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி அல்லது அரசாங்க பிணைகள் என்பவற்றில் வைப்பாக முதலிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) மீதமான 50% பணம் ஏனைய வர்த்தக வங்கிகளில் வைப்புக்களாக முதலீடு செய்யப்பட்டிருக்கலாம்.

5 - 205